# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர்-19 இதழ்-1 ஜனவரி - 2006



PRICE : Rs. 5/-

## கிறிஸ்துவின் சபை

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.**

**© 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382**

**E-mail : kangayamcofc@eth.net**

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. கிறிஸ்தவம் ஏன் வித்தியாசமானது. ? ........ 9
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 19
5. சிறுவர் பகுதி ........ 24
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 26
7. நாம் காரியம் வாய்க்க ........ 30

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

S. Rajanayagam
**Editor**

J.C. Choate
**Honorary Editor**

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 19 January - 2006 Issue - 1**


ஆசிரியர் உரை

## கொடியை ஏற்றுவோம்

நாம் வாழும் இப்புவியில், பற்பல வண்ணங்களை கொண்ட விதவிதமான கொடிகளை நாம் காண்கிறோம். உலகில் உள்ள எல்லா தேசங்களும், அனைத்து அரசியல் கட்சிகளும், எண்ணிலடங்காத அமைப்புகளும் தங்களுக்கென கொடிகளை வைத்துள்ளன. அக்கொடிகளை உயர்த்துவதிலும், தாழ்த்துவதிலும் அவைகளின் மதிப்பும், மரியாதையும் அடங்கியிருக்கிறது. எனவே கொடிகள் அவைகளின் கௌரவ சின்னமாகக் கருதப்பட்டு, உயிரினும் மேலாக மதிக்கப்பெறும். ஒருவன் வைத்திருக்கும் கொடியை வைத்து அவன் யார் என்று நாம் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

இப்படிச் சிறப்புகள் பலவற்றை தன்னகத்தே கொண்டுள்ள கொடியானது, வேதாகமத்தின் பக்கங்களிலும் இடம்பிடிக்கத் தவறவில்லை. உன்னதத்தின் தேவனால் **என் இருதயத்திற்கு ஏற்ற தாசன்** என்று சாட்சியிடப்பட்ட தாவீது, ஆடுமேய்க்கும் சிறுவனாக இருந்தபோதே இராட்சச மனிதனாகிய கோலியாத்தை வென்று அநேகருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்திய தாவீது, அரசுக்கட்டில் ஏறி யுத்தங்கள் பல செய்த வெற்றி வீரன் என்று புகழப்பட்ட தாவீது, ஒரு சமயம் சீரியரோடு நடந்த யுத்தத்தில் பின்னடைவை சந்திக்கிறான். அப்பொழுது, இனி வெற்றிக்கு வழி என்னவென்று ஆருடம் பார்த்துக்கொண்டிராமல், தன் நிலையை உய்த்து ஆராய்ந்து பார்க்கிறான். மேலும், தேவனுடைய பிள்ளைகளுக்கு வெற்றி எப்படிக் கிடைக்கிறது என்பதை இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ள

சரித்திரத்தின் பக்கங்களை புரட்டிப் பார்க்கிறான். அங்கே அவனுக்கு ஒரு உண்மை வெளிப்பட்டது. அதன் பின்னணியில் எழுதப்பட்டதுதான் அறுபதாம் சங்கீதம். இச்சங்கீதத்தின் அடிப்படைச் செய்தி **தேவனாலே பராக்கிரமம் செய்வோம்** என்பதாகும்.

அதாவது, **நாங்கள் தோல்வி அடைந்தாலும், எங்களுக்கு பின்னடைவு ஏற்பட்டாலும், எங்கள் தேவனாலே நாங்கள் ஜெயம் கொள்ளுவோம். யெகோவா எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்** என்பது. இப்படி பெரும் நம்பிக்கையை நெஞ்சிலே சுமந்து எழுதப்பட்ட இச்சங்கீதத்தில் **சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக உமக்கும் பயந்தவர்களுக்கு ஒரு கொடியை கொடுத்தீர்** (சங். 60:4) என்ற வசனம் இடம் பெற்றுள்ளது. இங்கே தாவீது கொடி என்ற வார்த்தையை பயன்படுத்தியதற்கு சரித்திரப் பின்னணி உண்டு. தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, விடுதலை பெற்று, வனாந்தர யாத்திரையில் இருந்தபோது, அமலேக்கியரோடு முதுல் யுத்தத்தை எதிர்க்கொள்ள வேண்டியிருந்தது. நான்கைந்து தலைமுறைகள் அடிமைகளாக இருந்தபடியால், எதிரிகளை எதிர்கொள்வதற்கு தேவையான நெஞ்சுரமும், எதிரிகளை மேற்கொள்ளுவதற்குத் தேவையான போர்முறைப்பற்றிய அறிவும் அற்றவர்களாக இருந்தார்கள். ஆயினும் கூட, யெகோவா அவர்களுக்காக யுத்தம் செய்து, அவர்களுக்கு வெற்றியைத்தந்தார். ஆம், அச்சமயத்தில் பிரமாணங்களின் தந்தையாகிய மோசே, மலையுச்சியின் மீது நின்று, தேவனுடைய கோலை தூக்கிப்பிடித்து நின்றான். அப்பொழுது இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள். மோசேயின் கையில் இருந்த தேவனுடைய கோல் தாழ்ந்த போது அமலேக்கியர் மேற்கொண்டார்கள். **தேவனுடைய கோலை உயர்த்திப் பிடிப்பதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது** என்பதை **உணரந்துக்கொண்ட ஆரோனும், ஊரும்,** மோசேயை ஒரு கல்லின் மீது உட்காரவைத்து ஆளுக்கொரு பக்கமாக நின்று தேவனுடைய கோல் உயர்ந்த நிலையிலேயே இருக்கும்படி தாங்கிப் பிடித்தார்கள். அப்பொழுது, யோசுவா யுத்தகளத்திலே நின்று, போர்முறையின் அடிச்சுவடுகள் கூட அறிந்திராத கத்துக்குட்டிகளை வைத்து போராடி பெறும் வெற்றி கண்டான். (யாத். 17:9-16).

இப்படி இஸ்ரவேலுக்கு, தனது சுதந்திர வரலாற்றில் கிடைத்த வெற்றியை, தேவனுடைய கோலை உயர்த்திப் பிடித்ததால் தங்களுக்குக் கிடைத்த அந்த அபார வெற்றியை நினைவு கூரும் படியாய், ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு **யேகோவா நிசி** என்று மோசே பெயரிட்டான்.

இதற்கு **யெகோவா என் கொடி** என்று பொருள். இவ்வுண்மையை விளங்கிக் கொண்டதாலேயே, தாவீது அக்குறிப்பிட்ட சங்கீதத்தின் வசனத்தை எழுதியிருக்க வேண்டும். மோசேயின் நாட்களில் தேவனுடைய ஜனங்களுக்கு வெற்றிகிட்டும்படியாக, தேவனுடைய கோல் உயர்த்தப் பட்டதை போலவே இப்பொழுதும் வெற்றி வேண்டுமானால் தேவனுடைய கொடி ஏற்றப்படவேண்டுமென்று கொடியை ஏற்றுதல் என்பது, ஒரு நிலையைத் தெளிவாக வெளிப்படுத்துவதாகும். அங்கே, சீரியரோடு நடந்த யுத்தத்தில் பின்னடைவு ஏற்பட்டபோது, அதற்கு காரணம் என்ன வென்பதைக் கண்டு கொண்டதோடல்லாமல் அதற்குப் பரிகாரம் என்னவென்பதையும் புரிந்து கொண்டு, யெகோவாவுடைய கொடியின் தேவையை உணர்ந்து இச்சங்கீதத்தைப் பாடியுள்ளான்.

இக்கட்டான நேரத்தில் தாவீது பாடின இச்சங்கீதத்தின் சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக உமக்கு பயந்தவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தீர் என்ற வசனத்தை ஆதாரமாக வைத்து அதைக் கிறிஸ்தவத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால், அதிலிருந்த நமக்குப் பயன்படும் சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியுமென்று தெரிகிறது. ஆம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகிய நாம் ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். இப்போராட்டத்தில் நமக்கு வெற்றி கிட்ட வேண்டுமானால், நாமும் யெகோவாவால் கொடுக்கப்பட்ட கொடியை உயர்த்தியாக வேண்டும். ஆகவே கிறிஸ்தவர்களுக்கு, ஆவிக்குரிய இஸ்ரவேலர்களுக்கு கொடுக்கப்பட்ட கொடி பற்றித் தெரிந்து கொண்டு, அதை நம் வாழ்வில், கிறிஸ்தவ ஜீவியத்தில் ஏற்றுவோம், வெற்றி பெறுவோம்.

## I. *கிறிஸ்தவர்களின் கொடி எது?*

நாம் முதலாவது தெரிந்து கொள்ள வேண்டிய காரியம், கிறிஸ்தவர்களின் கொடி எது என்பது. கிறிஸ்தவம் ஒரு விசுவாசமார்க்கம். எபிரேய ஆசிரியர், இந்த மார்க்கத்திற்கு அடிப்படையான விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவரும் இயேசு கிறிஸ்து தான் என்று அழகாகச் சொல்லியுள்ளார் (எபி. 12:1) இன்னும் இப்பூமியில் நாம் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக ஜீவிப்பதற்கு தேவையான பெலனை நமக்குக் கொடுக்கிறவராக கிறிஸ்து உள்ளார் என்றும் பவுலடியார் கூறியுள்ளார். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலிப். 4:13) என்று. அதாவது போராட்டம் நிறைந்த கிறிஸ்தவ ஜீவியத்தில், தான் வெற்றி பெற கிறிஸ்து போதும் என்கிறார். மேலும், அப்போஸ்தலன் பேதுரு கூறும் போது..... ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கதம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து

வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார். (1பேதுரு. 2:21) என்று. அதாவது வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நம்மை வழி நடத்துவதற்கு அவரின் அடிச்சுவடுகள் போதும் என்கிறார்.

இன்னும், கிறிஸ்தவ ஜீவியத்தில் நல்ல போராட்டத்தைப்போராடும் அனைவருக்கும் நீதியுள்ள நியாயாதிபதியாகிய கிறிஸ்து, நீதியின் கீரிடத்தைத் தருவார் என்று பவுல் இளம் பிரசங்கியாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்பொழுது கூறுகிறார். (2 தீமோ. 4:8). அதாவது, நித்திய வாழ்வுக்கான நுழைவுச்சீட்டு நமக்கு கிறிஸ்துவால் கொடுக்கப்படுகிறது. அதுமாத்திரமல்ல, இப்பூமிக்குண்டான வாழ்வில் பல வெற்றிகள் அவரால் கிடைக்கிறது. பாவத்திலிருந்தும் (2 கொரி. 1:14) பலவித சோதனைகளிலிருந்தும் (1கொரி. 10:13) உபத்திரவங்களிலிருந்தும் (2கொரி. 1:3-5) மரண பயத்திலிருந்தும் (1கொரி. 15:55-57) கிறிஸ்து நமக்கு வெற்றியைக் கொடுத்துள்ளார். கிறிஸ்துவினாலும், கிறிஸ்துவுக்குள்ளும் தான் நமக்கு வெற்றி உண்டு.

ஆகையால், அருமையானவர்களே, கிறிஸ்தவத்திற்கும், கிறிஸ்தவர்களாகிய நமக்கும் ஒரு கொடி உண்டு. அது கிறிஸ்துவாகிய கொடி. இக்கொடியை உயர்த்துவதிலும், தாழ்த்துவதிலும் நம்முடைய ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றி அடங்கியிருக்கிறபடியால், நாம் யாவரும், கிறிஸ்துவாகிய கொடியை நம் வாழ்வில் ஏற்றுகிற மக்களாக இருப்போமாக! அப்படி ஏற்றும் பொழுது தான் வடாத ஜீவ கிரீடம் நமக்குக்கிடைக்கும்.

## II. *இந்தக்கொடி யாரால் கொடுக்கப்பட்டது?*

இரண்டாவதாக நாம் தெரிந்து கொள்ள விரும்புவது, இந்தக் கொடி கிறிஸ்துவாகிய கொடி யாரால் நமக்கு கொடுக்கப்பட்டது என்பது. எப்பொழுதுமே, ஒன்றை யார் கொடுத்தார்கள் என்பதை வைத்து, அதற்கான மதிப்பும், மரியாதையும் கொடுக்கப்படும். நமது கட்டுரைக்கான வசனத்தில் பார்க்கும்போது ஒரு கொடியைக் கொடுத்தீர் என்று உள்ளது. அதாவது, கொடியை தேவன் கொடுத்ததாகச் சொல்லுகிறார். ஆகவே, கிறிஸ்துவாகிய கொடிக்கு ஈடும் இணையும் இல்லை. ஆம், இந்தக் கொடியை கொடுத்த தேவன் நித்தியமானவர் (உபா. 33:27) அவர் உன்னதமானவர் (ஆதி. 14:18) அவர் சர்வ வல்லமையுள்ளவர் (ஆதி. 17:1,2) அவர் ஜீவிக்கிறவர் (யோசு. 3:10) அவர் இஸ்ரவேலின் பரிசுத்தர். (ஏசாயா. 43:3) இப்படி அவரைப் பற்றி அநேக காரியங்களை சொல்லிக்கொண்டே போகமுடியும். இப்படிப்பட்ட தேவன் கிறிஸ்துவாகிய கொடியை கொடுக்கும் முன்பாக, தீர்க்க தரிசனங்களில் அவரைப்பற்றி எவ்வளவு அழகாக வெளிப்படுத்தியுள்ளார் என்று பாருங்கள். நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும். அவர்

நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு என்னப்படும். (ஏசா. 9:6) அப்படியானால், கிறிஸ்துவாகிய கொடிக்கு, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் வாழ்க்கையில் எப்படிப்பட்ட இடம் கொடுக்க வேண்டுமென எண்ணிப் பாருங்கள்.

ஒரு கட்சி அல்லது ஒரு இயக்கம் அல்லது ஒரு அமைப்பு போன்றவை ஒருவனுடைய வாழ்க்கையில் எந்த நன்மையும் செய்திருக்காது. ஆனாலும், அவைகளைச் சேர்ந்த அநேகர் அவைகளின் கொடிகளைச் சுமந்து திரிகிறதை நாம் காண்கிறோம். கடவுள் இல்லையென்று சொல்லுகிறவன் கூட தனக்கென ஒரு கொடியை வைத்து தன்னுடைய வாழ்க்கையில் அந்தக் கொடியைத் தூக்கிப்பிடிக்கிறான். இன்னும் கல்லையும், மண்ணையும் வணங்குபவர்கள் கூட தங்களுக்கென்று சில வகையான கொடிகளை உண்டாக்கி, அவைகளைக் கூச்சமும், அச்சமும் இல்லாமல் உயர்த்திக் காட்டுகின்றனர்.

இப்படிச் சுமந்து, தூக்கி, உயர்த்திப்பிடிக்கின்ற கொடிகளை எல்லாம் நாம் கவனித்துப் பார்த்தால் அவைகளனைத்தும் மனிதனால், மனிதனுக்குக் கொடுக்கப்பட்டவைகள் என்பது சந்தேகத்திற்கிடமின்றிதெரியும். ஆனால், அருமையானவர்களே, நம்முடைய கொடியாகிய கிறிஸ்து, உன்னதத்தின் தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளார். நம்முடைய நன்மைக்காக அவர் கொடுக்கப்பட்டுள்ளார். இந்த உண்மையை யோவான் அப்போஸ்தலன் எவ்வளவு நேர்த்தியாகச் சொல்லுகிறார் பாருங்கள். தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான். 3:16) என்று. இந்தக் கொடியாகிய கிறிஸ்து, நானும், நீங்களும் நித்திய ஜீவனை அடையும்படியாய் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளார். ஆகவே, நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் படியாய், கிறிஸ்துவாகிய கொடியை நம் வாழ்வில் ஏற்றுவோமாக!.

## III. இந்தக் கொடி யாருக்கு கொடுக்கப்பட்டது?

மூன்றாவதாக, நாம் தெரிந்து கொள்ள வேண்டிய காரியம், கிறிஸ்துவாகிய கொடி யாருக்குக் கொடுக்கப்பட்டது என்பது. தேவனுக்கு பயந்து நடக்கிறவர்களுக்கு இந்தக்கொடி கொடுக்கப்பட்டதாக சங்கீதக்காரன் சொல்லுகிறான். (சங். 60:4) தேவன், இயேசுவை உலகில் உள்ள அனைவருக்குமே அனுப்பினார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. யோவான் ஸ்நானகன் இயேசுக் கிறிஸ்துவைக் குறித்து சாட்சி சொன்னபோது இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றே சொன்னார். (யோவா. 1:29) ஆனால், அவர் யாருக்காக அனுப்பபட்டாரோ

அந்த உலகமும், அவர் எந்த ஜனத்திற்காக வந்தாரோ அந்த ஜனமும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இது குறித்து யோவான் அப்போஸ்தலன் தனது நற்செய்தி நூலில் இவ்விதம் கூறியுள்ளார். **அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமான வர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.** (யோவா. 1:10,11) என்று.

**அப்படியானால், கிறிஸ்துவாகிய கொடி யாருக்குக் கொடுக்கப்பட்டார்? தேவனுக்கு பயந்து நடக்கிறவர்களுக்கே. அவருக்கு பயந்து நடக்கிறவர்கள் யார்? தேவனில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களே அவருக்கு பயந்தவர்கள்** (1யோவா 5:5) என்று யோவான் கூறுகிறார். **ஆகவே, அவருக்கு பயந்து நடக்கிறவர்கள் கிறிஸ்துவாகிய கொடியை ஏற்றும் பொறுப்பை இங்கே ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இக்காரியத்தை அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதின் மூலம் ஒருவன் செய்யவேண்டும். அவருடைய கற்பனைகள் வேத வசனங்களே. கிறிஸ்துவின் பிறப்பிற்குப் பின் வாழ்கிற நமக்கு வேத வசனங்கள் என்பது புதிய ஏற்பாட்டு உபதேசங்களே. ஆகையால், அவருக்கு பயப்படுகிற யாவரும் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு மாத்திரம் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களாக இருக்க வேண்டும். ஆம் நம்முடைய உணர்வுகளுக்கும், நூதனமான உபதேசங்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும், அர்த்தமற்ற ஆர்ப்பட்டங்களுக்கும், பக்தியின் பேரால் நடக்கும் கூச்சல்களுக்கும் நாம் நம்மை ஒப்புக்கொடுக்கக்கூடாது.** ஏனெனில், நான் சொல்லிய வசனமே மனிதனை கடைசி நாளில் நியாயந்தீர்க்குமென்று இயேசு சொல்லியுள்ளார். (யோவா. 12:48).

ஆகையால், புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு மாத்திரம் தங்களை ஒப்புக்கொடுத்து, அதில் சொல்லியுள்ளபடி வாழ்கிறவர்களே, தேவனுக்குப் பயந்தவர்கள், கிறிஸ்துவாகிய கொடி இப்பொழுது இவர்களிடமே கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு ஒப்புக்கொடுத்த நாம், ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று முயற்சிக்கும் நாம் நம்முடைய பேச்சின் மூலமாகவும் (அப். 8:35) நம்முடைய நடக்கையின் மூலமாகவும் (எபே. 4:1) கிறிஸ்துவாகிய கொடியை ஏற்றுவோமாக!

## IV. *இக்கொடி எதற்காக கொடுக்கப்பட்டுள்ளது?*

இறுதியாக, நாம் கவனிக்க வேண்டிய காரியம், இக்கொடி எதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது. சங்கீதக்காரன் இது குறித்துச் சொல்லும்போது **சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக** என்று கூறுகிறார். ஆக, இக்கொடி கொடுக்கப்பட்டதற்கு ஒரு தெளிவான நோக்கம் உண்டு.

ஆனால், நாம் வாழும் இந்த நாட்களில், தேவனால் அவருக்கு பயந்தவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட கிறிஸ்துவாகிய கொடி எதற்காக ஏற்றபட்டுக்கொண்டிருக்கிறது? இதற்கு விடை கண்டுபிடிக்க ஒருவன் பூத கண்ணாடியைத் தூக்கிக் கொண்டு அலையத் தேவையில்லை. பெரும்பாலும், ஆம், பெரும்பாலும், பிழைப்பினிமித்தமே ஏற்றப்படுகிறது. இக்கருத்தை வெளியிடுவதற்காக என்னைத் தயவாய் மன்னியுங்கள். என்னுடைய இக்கருத்தில் உண்மையில்லாமலில்லை என்பதை, மெய்க்கிறிஸ்தவத்தை உன்னிப்பாகக் கவனிக்கும் ஒவ்வொருவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்வர். சத்தியத்தினிமித்தம் ஏற்றுப்பட வேண்டிய கிறிஸ்துவாகிய கொடி, இந்நாட்களில் பெரும்பாலும் பிழைப்பினிமித்தமே ஏற்றப்படுகிறது. இந்த நிலை ஏதோ நம்முடைய இந்த நாட்களில் தான் என்று நாம் திகைக்க வேணடிய அவசியமில்லை. முதல் நூற்றாண்டுக் காலத்திலேயே இந்த அவல நிலை இருந்ததாக அப்போஸ்தலன் பவுல் அங்கலாய்க்கிறார். அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்த நயவசனிப்பாலும் இச்சகப்பேசினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறார்கள். (ரோம. 16:16,17,18) இன்னும் தீத்துவுக்குப்பவுல் எழுதும்போது, இப்படிப் பட்டவர்களுடைய வாய் அடக்கப்படவேண்டுமென்று கூறுகிறார்.... அவர்களுடைய வாயை அடக்க வேண்டும். அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தாகதவைகளை உபதேசித்து முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள் என்று (தீத். 1:11).

இந்த கிறிஸ்துவாகிய கொடி பிழைப்புக்காவும், வயிற்றுக்காகவும் இந்த ஏற்றப்படாமல் சத்தியத்திற்காக ஏற்றப்பட வேண்டுமானால், எது சத்தியம் என்ற கேள்வி இங்கே எழுகிறது. இதற்கான விடை இயேசுவின் ஜெபத்தில் நமக்குக் கிடைக்கிறது. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம். (யோவா. 17:17). அப்படியானால், வேத வசனங்களைப் படிப்பதன் மூலமும் அவைகளை விசுவாசிப்பதன் மூலமும், அவைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலமும், அவைகளின் உபதேசத்தின்படி பாவமன்னிப்பைப் பெறுவதன் மூலமும், அவருடைய சபைக்குள்ளாக நிலைத்திருப்பதின் மூலமும், நம்முடைய விசுவாசத்தைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவிப்பதன் மூலமும், கிறிஸ்துவாகிய கொடியை நாம் ஏற்ற முடியம்.

என் அன்பிற்கினிய வாசகர்களே, ஒரு புதிய ஆண்டு துவங்கி சற்றேறக்குறைய ஒருமாதம் கடந்து போய்விட்டது. இந்தப்புதிய ஆண்டிலே நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? அவருக்கு பயப்படுகிற பிள்ளைகளாகிய நம்மிடத்திலே தேவன் கிறிஸ்துவாகிய கொடியை நாம் ஏற்றும்படியாகக் கொடுத்துள்ளார். அந்தக்கொடியை நாம் எந்த நிலையில் வைத்துள்ளோம்? கொஞ்சம் சிந்தித்துப்பார்ப்போம். கிறிஸ்துவாகிய கொடி கொடுக்கப்பட்டதின் நோக்கம் உங்கள் வாழ்வில் நிறைவேறிவிட்டதா? அந்த நோக்கம் இன்னும் நிறைவேறாமல் இருக்குமானால் புதிய ஏற்பாட்டுச் சுவிசேஷத்திற்கு உங்களை உடனடியாக ஒப்புக்கொடுங்கள். அதன் மூலம் நீதியின் கிரீடத்திற்குச் சொந்தக்காரர்களாகுங்கள்.

உண்மைச் சத்தியத்திற்கு உங்களை ஒப்புக்கொடுக்கும் ஆசீர்வாதம் பெற்றோரே! நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? இந்த கொடியை ஏற்ற வேண்டிய பொறுப்பை தேவன் நம்மிடம் தானே கொடுத்துள்ளார். சத்தியத்திற்கு உண்மையாக பயப்படுகிறவர்கள் அப்பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமென்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறாரே, நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? எவனிடத்தில் அதகிம் கொடுக்கப் படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும். ..... என்று நம்முடைய ஆண்டவர் சொல்லுயிருக்கிறாரே (லூக். 12:48). பயமாக இல்லையா?

அருமையானவர்களே, சர்வ வல்ல தேவன் நமக்குக் கொடுத்த கொடியாகிய கிறிஸ்துவை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுவோம். நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் ஏற்றுவோம். நம்முடைய குடும்பத்தில் ஏற்றுவோம். நம்முடைய சமுதாயத்தில் ஏற்றுவோம். நம்முடைய மாநிலத்தில் ஏற்றுவோம். நம்முடைய தேசத்திலே ஏற்றுவோம். ஆம், நம்முடைய மண்ணை கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்குவோம். ஆமென்.

**செ. ராஜநாயகம்**

## கொடியாம் கிறிஸ்து தரும் கிரீடங்கள்

| | |
|---|---|
| **நீதியின் கிரீடம்** | **[2தீமோத். 4:8]** |
| **ஜீவ கிரீடம்** | **[யாக். 1:12 வெளி. 2:10]** |
| **மகிமையின் கிரீடம்** | **[1பேதுரு. 5:4]** |
| **மகிழ்ச்சியின் கிரீடம்** | **[1. தெச. 2:19]** |

# கிறிஸ்தவம் ஏன் வித்தியாசமானது?

கிறிஸ்தவம் ஒரு உலகளாவிய மார்க்கம். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் கோடிக்கணக்கில் உலகில் உள்ளனர். அதன் அங்கத்தினர்கள் அதன் செய்தியை கூறி மேலும் பலரை கிறிஸ்தவர்களாக்குகிறார்கள். கிறிஸ்தவம், கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. அவரை புனிதர் என்றோ, ஒரு தீர்க்கதரிசி என்றோ மாத்திரமல்ல சர்வலோகத்தின் பாவத்திற்காக மரித்து மூன்றாம் நாள் கல்லறையை விட்டு உயிரோடெழுந்த தேவகுமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்துவை அப்போஸ்தலனாகிய பேதுரு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டார் (மத். 16:16-18) பரலோகத்தின் தேவன் கிறிஸ்துவை தன்னுடைய குமாரனென்று அங்கீகரித்தார் (மத். 17:5)

உலகிலேயே கிறிஸ்தவம் ஒன்றுதான் உயிருள்ள ஒரு தலைவரைக் கொண்டதாக உள்ளது. மற்ற எல்லா மதத்தினுடைய தலைவர்களும் மரித்துப்போனார்கள். அவர்கள் திரும்பவும் உயிரோடு எழவில்லை. கிறிஸ்து தான் மீண்டும் உயிரோடு எழுவேன் என்று சொன்னார். அவர் அப்படியே செய்தார் (யோ 11:25; மத். 28:1-6) அவர் தமது வாக்கை நிறைவேற்றாமலிருந்தால் பொய்யராகவும், வஞ்சகராகவும் காணப்படுவார். அவர் உயிரோடு எழாவிட்டால் கிறிஸ்தவமும் வளர்ந்திருக்காது. ஆனால் கிறிஸ்தவம் வாழுகிறது, கிறிஸ்துவின் சபை வாழுகிறது. பொதுவான உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கையும் வாழுகிறது. இவையெல்லாம் வாழுவதற்கான காரணம் கிறிஸ்து உயிரோடு வாழ்கிறார்.

கிறிஸ்தவம் மிகவும் பிரபலமான மார்க்கம். மற்ற எந்த மார்க்கத்தையும் விட இவ்வுலகில் நன்மைக்கான மாற்றத்தை இது அதிகம் கொண்டு வந்துள்ளது. உலகின் சரித்திரமே கிறிஸ்துவின் வாழ்வு, மரணம் இவைகளால் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. தேச சட்டங்கள் கிறிஸ்துவின் போதனைகளின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. அநேகர் ஞாயிற்றுக்கிழமையை விடுமுறை என்று அறிவித்திருக்கிறதைக் காணலாம். அது கிறிஸ்தவத்திலிருந்து வந்ததாகும். ஏனெனில் கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தார். கிறிஸ்து தன்னைப் பின்பற்றுபவர்களை வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிக்கும்படி கூடி வரவேண்டும் என்று கட்டளையிட்டார். அந்நாளிலே தன்னை நினைவு கூறும்படியும் கட்டளையிட்டார் (மத். 28:1-6; அப். 20:7).

மனிதனுக்கு மிக உயரிய நெறிகளை சொல்லித் தருவது கிறிஸ்தவம் தான். நேர்மை, கடமை செலுத்துவது, கூலி கொடுப்பது, ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்த வேண்டும் போன்ற நெறிகளை கிறிஸ்தவம் போதிக்கிறது. ஒழுக்க சுத்தத்தையும், குடும்ப முறையையும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயரிய நெறியையும், திருமண பந்தத்தில் மரணபரியந்தம் கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்றும் போதிக்கிறது. தேவனை எல்லாருக்கும் தலையாகவும், புருஷனை மனைவிக்கு தலையாகவும் அங்கீகரிக்கிறது. கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் உள்ள பொறுப்பை எடுத்துக்காட்டி பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்க வேண்டும் என்றும் சொல்லுகிறது.

கிறிஸ்தவம் என்பது ஒரு மார்க்கம். மார்க்கம் என்பது தேவனுக்கும் மனிதனுக்கும் சேவை புரிவதாகும். யாக்கோபு ஆசிரியர் சொல்லும் போது, "திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது". (யாக். 1:27). திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பது என்றால் அவர்களிடம் போய் எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்பது மாத்திரமல்ல, ஜனங்களின் தேவையை சந்திப்பது ஆகும். கிறிஸ்தவர் தங்களால் இயன்றவரை மற்றவர்களுடைய தேவையை சந்திக்க வேண்டும். பவுல் சொல்லும் போது, "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்". (கலா 6:2) கிறிஸ்தவத்தை தழுவியிருக்கிறவர்கள் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் தேவனென்று விசுவாசிக்கிறார்கள். (ஆதி. 1:1) கிறிஸ்துவையோ உலகத்தில் அனுப்பப்பட்டு மனிதர்களுள் வாழ்ந்து உலகத்தின் பாவத்திற்காக சிலுவையில் மரித்த தேவ குமாரனென்று விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்து சொல்லும் போது, "ஆகையால், நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்". (யோவ 8:24) பரிசுத்த ஆவியானவர் அநேகரை ஏவி தேவனுடைய வார்த்தையை எழுதும்படி செய்தார். ஆகையால் தான் வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள்" (II பேதுரு 1:21; II தீமோ 3:16,17 மத். 24:35) கிறிஸ்து தன் சபையை ஸ்தாபித்தார், ஒரே சபையை தான் ஸ்தாபித்தார் இரட்சிக்கப்படுகிறவர்கள் அதில் தான் சேர்க்கப்பட்டனர் (மத். 16:18; எபே 4:4-6; அப். 2:47) கிறிஸ்துவின் மரணம்

அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளை நாம் நம்புகிறோம். அந்த நற்செய்தி உலகமெங்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும், "பின்பு, அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவன் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்". (மாற் 16:15,16). கர்த்தருக்குக் கீழ்படிகிறவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். கிறிஸ்தவர்களாக மாத்திரம் ஆகிறார்கள். வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்காக வாழ்கிறார்கள். (மத் 7:21; 1 பேதுரு 4:16; யோவ 4:24; அப். 20:7; லூக்கா 9:23)

கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்றும் (1கொரி 1:10) கிறிஸ்துவுக்குள் எல்லாரும் ஒன்றே என்றும் கிறிஸ்தவம் போதிக்கிறது. பவுல் எழுதும் போது, "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக் கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே, யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை; நீங்க ளெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் என்கிறார்". (கலா 3:26-28). கர்த்தருடைய குடும்பத்திற்குள் ஒருவன் சரீரப்பிரகாரமாக பிறக்க முடியாது. ஆகவே, கிறிஸ்தவம் சரீரப்பிரகாரமாக பிறப்பினால் வளர்வதல்ல மாறாக ஆவிக்குரிய பிறப்பின் மூலமே வளர்கிறது (யோவான் 3:3-5) வேறு வார்த்தைகளில் சொன்னால், ஜனங்களுக்கும் தம்மைபற்றி போதிக்கும்படி கர்த்தர் தமது சீஷர்களை அனுப்புகிறார், அவர்கள் சென்று ஜனங்களுக்கு வேத வசனங்களை விளக்கி, கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும் வேண்டுமென்றும், அதன் மூலமே கிறிஸ்து அவர்களை இரட்சிப்பார் என்றும், ஒருவன் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிவதன் மூலமே தேவனுக்கு அவன் புத்திரனாக முடியம் என்றும் அவர்கள் போதிக்க வேண்டும். பவுல் சொல்லும்போது, விசுவாசம் தேவ வசனத்தை கேட்பதன் மூலமே வருமென்று கூறுகிறார் (ரோம. 10:17) எபிரெய ஆசிரியர் கூறும் போது, விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியமென்றார் (எபி. 11:6) கிறிஸ்துவையையும், அவருடையவர்களையும் பற்றி எபிரெய ஆசிரியர் கூறும்போது, "அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" (எபி. 5:8,9) என்கிறார். இதை வாசிக்கும் போது, குழந்தைகளும்,

சிறுவர்களும் சபை அங்கத்தினர்களாக முடியாது என்பதை நாம் அறிகிறோம். அவர்கள் நன்மை, தீமை அறிய தக்க வயதை அடைய வேண்டும். அவர்களே கிறிஸ்துவை விசுவாசித்து கீழ்ப்படிவதாக இல்லையா என்று முடிவெடுக்க வேண்டும்.

எல்லாரும் ஒரு நாள் உயிரோடு எழுவார்களென்றும், எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு உண்டுயென்றும், தங்கள் நித்தியத்தை எல்லாரும் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ கழிக்க வேண்டுமென்று கிறிஸ்தவம் போதிக்கிறது. கிறிஸ்து சொல்லும்போது, "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்". (யோவா. 5:28,29) என்றார். மேலும் எபிரெய ஆசிரியர் கூறும் போது, "அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபிரெ. 9:27) என்கிறார். பவுல் கூறும் போது, "ஏன்னெறால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். (II கொரி. 5:10). நியாயத் தீர்ப்பு நடந்த பின்பு, துன்மார்க்கர் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்கள் நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் (மத்தேயு. 25:46).

கிறிஸ்தவம் எதிர்க்கிற காரியங்களும் உண்டு. சாத்தான், உலகம், மாம்சத்தின் கிரியைகள் ஆகியவைகளை அது எதிர்க்கிறது (1 யோவா. 2:15-17; கலாத். 5:19-21) இன்னும் குறிப்பாக, அது, யுத்தம், லஞ்சம், புகைபிடித்தல், சூதாட்டம், குடி, போதை வஸ்துக்கள், கருக்கலைப்பு போன்றவைகளை அது எதிர்க்கிறது. ஜாதி முறையையும், விக்கிரக ஆராதனையையும், பொய்யான மார்க்கத்தையும், மனிதர்களுக்கு முன் தங்களை தேவர்களை போல உயர்த்துகிறவர்களையும் அது எதிர்க்கிறது. மறுபிறவி உண்டு என்று அது நம்புவதில்லை, அதின் அங்கத்தினர்கள் மாம்சம் புசிக்கக் கூடாது என்று தடைசெய்வதுமில்லை. பவுல் சொல்லும்போது, சிலர் விவாகம் பண்ணாதிருக்கவும், தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டும் என்று சிலர் கட்டளையிடுவார்கள். "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக் கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல. அது வேத வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்" (II தீமோத். 4:3-5) என்கிறார்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நாங்கள், தேவனுடைய வார்த்தையில் சொல்லப்படாதிருக்கிற கிறிஸ்தவத்தையும் எதிர்க்கிறோம். வேறு வார்த்தையில் சொல்வோமானல், உலகம் பார்க்கிற பெரும்பாலான கிறிஸ்தவம் பொய்யான கிறிஸ்தவமாகயிருக்கிறது. இதனால் உண்மை கிறிஸ்தவத்திற்கு கெட்ட பெயர் கிடைக்கிறது. கிறிஸ்தவர்கள் சண்டையிடுவதையும், அதைச் செய்வதும், இதைச் செய்வதையும் நாம் கேள்விப்படுகிறோம். அவைகள் கெட்டவைகளாகவும், தவறானதாகவும் இருக்கிறது. இவைகள் பொதுவாக, உண்மை கிறிஸ்தவர்களால் செய்யப்படுவதில்லை. வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் கிறிஸ்தவத்தை உண்மையாய் பின்பற்றுகிறவர்கள், நன்மையான காரியத்தை செய்து, இவ்வுலகத்தை நாம் வாழக்கூடிய நல்ல இடமாக மாற்றுவார்கள். மனிதனால் உண்டாக்கப்பட்ட கிறிஸ்தவத்திற்கும் பிரிவினை சபைகளும், குழுக்களும் எதிராக தேவ வார்த்தை போதிக்கிறது.

இவ்வுலகத்தின் மார்க்கங்களையோ அல்லது கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளும் மனித குழுக்களையோ நாங்கள் ஏற்றுக்கொள்ளுவதில்லை, ஆனால், மார்க்க சுதந்திரத்தை நாங்கள் நம்புகிறோம். உலகத்திலுள்ள கள்ள மார்கங்களை தேவன் அங்கீகரிப்பதில்லை, தன்னை சேவிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பதை அவனவனுடைய முடிவுக்கு விட்டுவிடுகிறார். எந்த மனிதனுக்கும் தன் மார்க்கத்தை மற்றவர்கள் மீது திணிக்க எந்த அதிகாரமுமில்லை. தன் ஆத்துமாவுக்கு என்ன செய்ய விரும்புகிறானோ அதை செய்யும் சுதந்திரத்தை பெறாத வரைக்கும் ஒருவன் உண்மையில் சுதந்திரமுள்ளவனல்ல. உண்மையான விடுதலை தேவ வார்த்தையினால் உண்டாகிறது (யோவா. 8:32) அது தான் தேவனை ஒருவனுக்கு அறிமுகப்படுத்துகிறது, அத்தோடு பாவத்திலிருந்து விடுதலை பெற வழியையும் சொல்லுகிறது.

நீங்கள் எந்த மார்க்கத்தை பின்பற்றுகிறீர்கள்? நீங்கள் ஏன் அதை பின்பற்றுகிறீர்கள்? நீங்கள் அதற்குள் சரீரப்பிரகாரமாக பிறந்தீர்களா? அல்லது யாரோ ஒருவர் அதை உங்களுக்கு போதித்து, அதை ஒன்றான மெய் வழி என்று நீங்கள் ஏற்றுக்கொண்டதின் விளைவா?

உங்கள் மார்க்கம் அர்த்தம் உள்ளதாக இருக்கிறதா? இந்த நவீன உலகத்தின் தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்கிறதா அல்லது உங்களை பழங்காலத்து வாசிகளாக மாற்றுகிறது. அது அர்த்தமுள்ள முடிவுகளை உங்களுக்கு கொடுக்கிறதா? அல்லது நீங்கள் எடுக்கும் மார்க்க முடிவுகள் அறிவு சார் முடிவுகளாக இல்லையா?

கிறிஸ்தவத்தைக் குறித்து நாம் பயப்பட தேவையில்லை, ஏனென்றால், ஜனங்கள் வேதத்தை வாசித்து, தியானித்து, தங்கள் சொந்த முடிவுகளை எடுக்க முழு உரிமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவம் அர்த்தமுள்ளதாகவும் அறிவுபூர்வமாகவும் இருக்கிறது. அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவின் மீது விசுவாசம் உள்ளவர்களையும், அம்மார்க்கம் அவர்களுக்கு செய்யும் காரியங்களையும் அதை பின்பற்றாதவர்களையும் கவனியுங்கள். கிறிஸ்தவம் நடைமுறை படுத்தப்படும் போது, அதை பின்பற்றுகிறவர்களை ஆவிக்குரிய, சரீரப்பிரகாரமான வாழ்க்கையில் சீரடையச் செய்கிறது. அவர்கள் மகிழ்ச்சியானவர்களாக இருக்கிறார்கள், ஏனெனில் அவர்கள் வாழ்வதற்கு அநேக காரியங்கள் உண்டு, அவர்கள் மேலானவைகளை எதிர்பார்த்து வாழ்கிறார்கள்.

நீங்கள் கிறிஸ்துவை விசுவாசியாதவர் என்றார், கிறிஸ்தவத்தைப் பற்றி நினைத்துப்பாருங்கள். வேதாகமத்தில், புதிய ஏற்பாடு என்னும் பகுதியில் அதைப் பற்றி படித்துப்பாருங்கள். அதை நீங்கள் செய்தால், ஒரு கிறிஸ்தவனாக விரும்புவீர்கள் என நான் நம்புகிறேன். மேலும், நீங்கள் கிறிஸ்தவராக விரும்பினால், தேவனையும், தேவ குமாரனான கிறிஸ்துவையும், விசுவாசிக்க வேண்டும், உங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும். கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். பாவ மன்னிப்புக்காக நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும் (எபி. 11:6; யோவா. 14:1-3; அப். 17:30; ரோமர். 10:10; அப். 2:38) நீங்கள் அதை செய்யும் போது, கர்த்தர் தமது சபையில் உங்களை சேர்த்துக் கொள்ளுவார். நீங்கள் கிறிஸ்தவராகி, கிறிஸ்தவத்தின் அங்கமாகயிருக்கலாம் (அப். 2:47; 1 பேதுரு 4:16) இது எத்தனை எளிதானது, இது சுலபமானதும், கஷ்டமில்லாததுமாக இருக்கிறது. ஆகையால், இந்த எளிய திட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளுமாறு உங்களை அன்புடன் ஊக்கப்படுத்துகிறோம்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

***திருமறை ஆசான் ஆசிரியர் சகோ. ராஜநாயகம் அவர்கள் ஜனவரி மாதம் தேவ செய்தி அளித்த நற்செய்தி கூட்டங்கள்.***

| **நாள் :** | **இடம் :** |
|---|---|
| ஜனவரி 15-2006 | திருச்செங்கோடு. |
| ஜனவரி 21-2006 | தர்மபுரி. |
| ஜனவரி 28-2006 | கொங்கணாபுரம். |

பெண்கள் பகுதி

# பத்து தாலந்து பெண்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளுக்கு அடியாளின் புத்தாண்டு வாழ்த்துக்கள். இம்மாதமும் உங்களோடு சேர்ந்து வேதத்தின் ஆலோசனைகளை கற்றுக்கொள்வதற்கு தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

நமதருமை இரட்சகர் இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் உவமைகள் மூலமாக பரத்துக்கடுத்த காரியங்களை போதித்து வந்தார். அதில் ஒரு உவமை (மத். 25 : 15-21) முடிய உள்ள வசனங்களில் இடம் பெற்றிருக்கும் தாலந்து உவமை. 5 தாலந்தை பெற்றவன் பத்தாக்கினான். இரண்டு தாலந்து நான்காக்கப்பட்டது. ஒரு தாலந்தை வாங்கினவன் மண்ணில் புதைத்து வைத்தான்.

நம் அனைவருக்குள்ளும் தேவனால் கொடுக்கப்பட்ட தாலந்துகள் உள்ளன. அதை பயன்படுத்தி தாலந்துகளை பெருக்கிக் கொள்வது நம்மேல் விழுந்த கடமை. ஏனென்றால், நாம் பெற்ற தாலந்துகளைக் குறித்து நாம் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். "**எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்**" (லூக். 12:48). நம்முடைய திறமை நமக்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் நம்முடைய செல்வாக்குகள் இவையாவையும் வைத்து நாம் நியாயந் தீர்க்கப்படுவோம். பொதுவாக, மக்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்டே காணப்படுகிறோம். ஒரே மாதிரி பிறக்கும் இரட்டைக் குழந்தைகள் கூட மனதிலும், செயலிலும் வேறுபட்டு காணப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். வித்தியாசமான குணங்களைப் பெற்ற நாம் வித்தியாசமான ஒருவரை மணந்து கொள்ளுகிறோம். ஆமையும், முயலும் போன்று, தந்திரமுள்ள நரியும் சாந்தமுள்ள ஆட்டுக் குட்டி போன்றும், சிங்கமும் எலியும் போன்ற தம்பதிகள் இருப்பதை நாம் வாழ்நாட்களில் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனாலும், பூமியிலே மனிதன் வாழக்கூடிய தன் வாழ்நாட் காலத்தில் பல செயல்களை தலைகீழாக மாற்றி சாதனைகளை புரிந்து கொண்டுதான் இருக்கிறான். இவ்வாறு செயல்படுவதற்கு தேவன் பெலத்தை கொடுக்கிறார். எனவே, எல்லா மகிமையும் தேவனுக்குத்தான் சேரும். பிரசங்கி இதை மிகவும் அழகாக வர்ணிக்கிறார். ஒருவனுடைய வேகம், சவுரியம், ஞானம், புத்தி, அறிவு இவை ஒன்றும் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றாது. சமயமும், தேவச்செயலும் இல்லாவிட்டால் அவன் ஒன்றை பெற்றுக் கொள்ள முடியாது. (பிரசங்கி. 9:11)

பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்திலே ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்ற தம்பதியரை அறிமுகம் செய்கிறார். தேவன் பயன்படுத்திய தம்பதியராகிய இவர்கள் வியக்க வைக்கும் பெரிய காரியங்களை செய்திருக்கிறார்கள். பிரிஸ்கில்லா "**10 தாலந்துகளை**" கொண்ட ஒரு ஸ்திரி என்று கூறலாம். இவள் தேவனுக்காக தன்னை அப்படியே ஒப்புக் கொடுத்தவள். தன்னையும், தேவனையும் நேசிக்கக்கூடிய கணவனை பெற்றிருக்கும் சிலாக்கியம் பெற்றவள்.

வேதாகமத்திலே சில பெண்களுடைய பெயர்கள் முதலில் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக மிரியாம் (எண் 12:1-3), இயேசுவின் தாயாகிய மரியாள் (லூக்கா 2:16). பிரிஸ்கில்லா (அப். 18:18) ஆகியோர் ஆவர். குடும்பத்திற்கு தலைவன் கணவன் என்பதற்கு சான்றாக ஆக்கில்லாவின் பெயர் பலமுறை முதலில் இடம் பெற்றிருந்தாலும், பிரிஸ்கில்லாவின் பெயர் அவளுடைய வைராக்கியம், உற்சாகம், ஞானம், பிறருக்கு பணி புரிந்தது போன்ற காரியங்களினிமித்தம் அவளுடைய பெயர் அவ்வப்போது முதலில் இடம்பெற்றிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்தில் இத்தம்பதியரோடு சேர்ந்து மூவரும் கூடாரத் தொழில் செய்கிறார்கள். பவுலை இவர்கள் இருவரும் தங்கள் வீட்டில் தங்கியிருக்கும்படி அனுமதி கொடுத்தனர். பிறகு கெங்கிரேயாவில் பவுல் தனக்கு பிரார்த்தனை ஒன்றை நிறைவேற்றும்படியாய் இருந்து தலைச்சவரம் பண்ணினபோது பிரிஸ்கில்லாவும் ஆக்கில்லாவும் உடன் இருந்தனர் என்று அப். : 18:18ல் வாசிக்கிறோம். பின்பு எபேசு பட்டணத்தில் வேதாகமங்களில் வல்லவனாகிய அப்பொல்லோ என்ற யூதனைக் கண்டு அவனுக்கு தேவனுடைய மார்க்கத்தை திட்டமாய் போதிக்க வேண்டுமென்று விரும்பி தங்கள் வீட்டில் சேர்த்துக்கொண்டார்கள். பிரிஸ்கில்லா தன் வீட்டில் அவனுக்கு இடம் கொடுக்காமல் இருந்திருந்தால் அப்பொல்லோ வேத வாக்கியங்களை ஏற்றுக் கொண்டிருக்க முடியாது. வேதத்தில் வல்லவன், ஆனால் எது உண்மை என்பதை அறியாத ஒரு ஆசானை நாம் பெற்றிருக்க முடியாது. பிரிஸ்கில்லா தன் முயற்சியால்


**நற்செய்தி கூட்டங்கள்**

**ஜெபியுங்கள் !** **பங்கு பெறுங்கள் !!**

**திருமறை ஆசான் ஆசிரியர் சகோ. ராஜநாயகம் அவர்கள் வருகிற பிப்ரவரி மாதத்தில் கலந்து கொண்டு தேவ செய்தி அளிக்கும் நற்செய்தி கூட்டங்கள்**

| **நாள் :** | **இடம் :** |
|---|---|
| **பிப்ரவரி 4-2006** | **பல்லடம் - கிறிஸ்துவின் சபை வளாகம், BDO காலனி** |
| **பிப்ரவரி 11-2006** | **வடக்கு திருப்பூர் - கிறிஸ்துவின் சபை வளாகம், சிக்கண்ணா கல்லூரி எதிரில்** |
| **பிப்ரவரி 18-2006** | **கவுந்தப்பாடி - கிறிஸ்துவின் சபை வளாகம், சரவணா மொசைக்கம்பெனி அருகில்** |

ஆக்கில்லாவுக்கு உடனிருந்து இந்த ஊழியத்தை செய்திருக்கிறாள். இங்கே பிரிஸ்கில்லா தானாக எதையும் அப்பொல்லோவுக்கு போதிக்கவில்லை. ஆனால், அவன் போதிக்கப்படும்படியாக எல்லா முயற்சிகளையும் இவள் எடுத்திருக்கிறாள்.

மேலும் பிரிஸ்கில்லா வீட்டில் சபை கூடி வந்தது என்று வாசிக்கிறோம். ஒரு ஸ்திரி எந்த அளவு தன் வீட்டை மற்றவர்களுக்கு கொடுத்திருந்தால் அங்கு சபை கூடிவந்திருக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மக்களை நேசித்தாள். ஆத்தும பாரம் இவளுக்கு இருந்தது. இப்படி நிறை குணங்களை தன்னுள்ளே கொண்டவள்தான் இந்த பிரிஸ்கில்லா. அப். பவுல் இவர்களைப் பற்றி கூறும்போது **"கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும், ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள். அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றி யறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டில் கூடி வருகிற சபையையும் வாழ்த்துங்கள்"** (ரோமர். 16:3-5).

பவுலுக்காக தங்கள் கழுத்தை கொடுத்தவர்கள் என்ற பாக்கியத்தை பிரிஸ்கில்லா பெற்றுவிட்டாள். இதை வாசிக்கும்போது நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியும், பெருமையுமாய் இருக்கிறது. தேவன் தனக்கு கொடுத்த தாலந்துகளை ஞானமாய் பயன்படுத்தி பரிசுத்த பவுலின் வாழ்க்கையை காப்பாற்ற உதவியாயிருந்தாள். தங்கள் கழுத்தை கொடுத்தார்கள் என்று கூறும் போது இது சாதாரண ஒரு செயல் அல்ல. தங்கள் வாழ்க்கையையே பவுலுக்காக கொடுத்தார்கள். எவ்வளவு ஓர் அருமையான தம்பதியர்.

அடுத்ததாக 1 கொரி. 16:19-ல் **"ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங் கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்"** என்று பவுல் கூறுகிறார். கடைசியாக அப்.பவுல் இவர்களை IIதீமோ. 4:19-ல் குறிப்பிடும்போது, **"பிரிஸ்காளுக்கும், ஆக்கில்லாவுக்கும் ஒநேசிப்போருவின் வீட்டாருக்கும் என் வாழ்த்துதலைச் சொல்லு"** என்று தன்னால் அதிகம் நேசிக்கப்படும் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். இங்கே ஆவியானவர் பவுலைக் கொண்டு பிரிஸ்கில்லா பெயரை முதலில் எழுத வைக்கிறார்.

இன்றைக்கும் கூட தேவனுக்கென்று சில பிரிஸ்கில்லாக்கள் இருக்கவே செய்கிறார்கள். இன்றைய பிரிஸ்கில்லாக்கள் நமக்கு முன்னோடியாக இருந்த வேதாகமத்தின் பிரிஸ்கில்லாவுக்கு எப்போதும் நன்றியுடைவர்களாக இருக்க வேண்டும். திறமைகளையும், பொறுப்புகளையும் சில பெண்களுக்கு தேவன் கொடுத்து வைத்திருக்கிறார். ஆனாலும், அவைகளுக்கு ஓர் எல்லையையும் வகுத்திருக்கிறார். பிரிஸ்கில்லாள்களுக்கு புல்பிட் சொந்தமல்ல ஆனால், நற்கிரியைகள் சொந்தம். பொதுவான இடங்களில் அவள் சிறிதளவே பிரகாசிக்க வேண்டும். உண்மையான பிரிஸ்கில்லாக்கள் அடையாளம் தெரியாதவர்களாகத்தான் இருக்க வேண்டும். இங்கே, வேதாகமத்தின்

பிரிஸ்கில்லா பவுலோடும், ஆக்கில்லாவோடும் சேர்ந்து கூடாரத் தொழில் செய்தாள். தன் கணவனுடன் சேர்ந்து ஊழியத்துக்காக தன் கழுத்தைக் கொடுத்தாள். கணவனோடு சேர்ந்து சக கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்துக்களை செலுத்துகிறாள். அவள் ஒருபோதும் தனியாக நின்று பிரசங்கிக்கவோ, மேடை ஏறவோ கிடையாது. அதனால் அவள் எதையாவது இழந்தாளா? எதையுமில்லை. எதையாவது ஆதாயம் செய்தாளா? நிறைய ஆதாயம். தேவன் தனக்கு கொடுத்த தாலந்துகளை பன்மடங்கு பெருக்கி தேவனுக்காக பயன்படுத்தினாள்.

எல்லா பிரிஸ்கில்லாக்களுக்கும் ஆக்கில்லாவை போன்று கணவன் கிடைக்கும் சிலாக்கியம் இருக்காது. தன் மனைவியின் நல்ல வேலைகளுக்கு ஆதரவு கொடுத்தான். நல்லவேளை நம் பிரிஸ்கில்லா பேராசை மிக்க அனனியாவுக்கோ, தேமாவுக்கோ, தியோத்திரேப்புவுக்கோ மனைவியாக வாய்க்கவில்லை.

உண்மையாலுமே யார் யாரை ஒன்றாக இணைக்க வேண்டுமென்பதில் தேவன் மிகவும் கவனமாக இருக்கிறார். நமது தேவன் எவ்வளவு நல்லவர் பாருங்கள்!

இந்த 10 தாலந்தை பெற்ற பிரிஸ்கில்லாளுக்கு பயம் என்ற ஆவி இல்லாதிருந்தது. "**தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல்**" (II தீமோத். 1:7) என்று வாசிக்கிறோம். தேவனுக்கு பயப்படும் பயத்தைத் தவிர, வேறு பயம் நமக்கு தேவையில்லை. பயம் என்ற ஆயுதத்தால் சாத்தான் நம்மை தோலவியுறச் செய்து விடுவான். பிரிஸ்கில்லா பல தாலந்துகளைப் பெற்றிருந்தாலும் தன் கணவனை தலைவனாக ஏற்றுக்கொள்ள மறுக்கவில்லை. அவள் அதிகாரத்துக்கு கீழ்ப்படிந்தே இருந்தாள்.

ஆக, இதை வாசித்த அன்பானவர்களே! நாமும் பிரிஸ்கில்லாவைப் போன்று கணவனோடு சேர்ந்து கர்த்தருக்காக வேலை செய்வோம். "**பகற்காலமிருக்கு மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்.**" என்று நமதாண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து யோ. 9:4-ல் கூறியுள்ளபடி அவருக்காக எந்த வகையிலாவது வேலை செய்வோம். பிரிஸ்கில்லா தனக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களை பயன்படுத்தி தாலந்துகளை பெருக்கிக் கொண்டது போல் நாமும் கர்த்தர் கொடுத்த இந்த புதிய ஆண்டில் கர்த்தருக்காக பல வேலைகளைச் செய்து நம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவருக்கே அர்ப்பணம் செய்வோம். முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையில் இருந்த பிரிஸ்கில்லாளைப் போன்று இன்றும் சபையில் அநேக பிரிஸ்கில்லாக்கள் தோன்றி சபைக்காக தங்கள் கழுத்தை கொடுக்க ஜெபிப்போம்.! ஆமென்!!

***- ரேச்சல் ராஜநாயகம்***

வாலிபர் பகுதி

# நான் உனக்குக் கேடகமாயிருக்கிறேன்

அகிலத்தையும், ஆகாயத்தையும் அதிலுள்ள யாவையும் சிருஷ்டித்த அநாதி தேவன், ஒவ்வொரு உயிரினத்தையும் மிக நேர்த்தியாக உண்டாக்கினார், என்பதில் ஐயமில்லை. நம்முடைய பரம தந்தை, தான் உண்டாக்கின சிருஷ்டிகள், ஆதரையில் வாழும் போது ஆபத்துகளை சந்திக்க நேரிடும் என்பதை தன் அநந்த ஞானத்தினால் அறிந்து பல உயிரினங்களுக்கு அவைகளின் உடலிலிருக்கும் உறுப்புகளையே கேடகமாக திகழும்படி இயற்கையாக உண்டாக்கியிருக்கிறார். தேவ சிருஷ்டிப்பான ஆமையை கவனித்தால் தன்னை தாக்கி அழிக்க விரும்புகிறவர்களிடமிருந்து தேவன் தனக்கு கேடகமாகக் கொடுத்த ஓட்டை பயன்படுத்தித்தான் தப்பித்துக் கொள்ளும். இப்படி, ஆமைக்கு ஓட்டையும், நத்தைக்கு கூட்டையும், யானைக்கு தும்பிக்கையும், முள்ளம் பன்றிக்கு முள்ளையும் தேவன் கொடுத்திருக்கிறார். மனிதன் தான் சந்திக்கும் ஆபத்திலிருந்து தப்பிக் கொள்ள புத்தியைக் கொடுத்திருக்கிறார். ஆனால், எந்த மனிதனும் தன் புத்திக் கூர்மையை மட்டும் வைத்துக் கொண்டு ஆபத்திலிருந்து தப்ப முடியாது என்பது திண்ணமாதலால், இவ்வாண்டில் முதல் மாதத்திலிருக்கும் நாம் தேவனை நமக்கு கேடகமாக்கிக் கொள்ள வேண்டுமென்ற சிந்தனையோடு இக்கட்டுரையை வடிக்கிறேன். படித்துச் சுவைத்து, மற்றவர்களுடன் பகிர்ந்திடுக.

வேதாகமத்தை நேசித்து, வாசிக்கும் ஒவ்வொருவரும் விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாமை நன்றாக அறிந்திருப்போம். தேவன் அவரை ஊர் என்னும் பட்டணத்திலிருந்து, தன் இன, ஜன, பந்துகளை விட்டு தான் காண்பிக்கும் தேசத்திற்கு வரும்படி அழைத்தார். தேவன் தன்னை அழைத்த போது, தான் இதுவரை கண்டிராத தேசத்தை நோக்கி பயணிக்கும்படி தன்னை தேவனுக்குக் கீழ்ப்படுத்தினான் இந்த ஆபிரகாம் (எபி. 11:8). அப்படிப்பட்ட ஆபிரகாமினுடைய வாழ்க்கையில் ஒரு கால கட்டத்தில், "இந்தக் காரியங்கள் நடந்த பின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்; ஆபிரகாமே, **நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்**" (ஆதி. 15:1) என்று வாசிக்கிறபடியால், எந்த காரியங்களுக்குப் பின் தேவன் இப்படிச் சொன்னார் என்பதை நாம் கவனிப்போம் வாருங்கள்.

## எந்த காரியங்களுக்குப் பின்பு

பரலோகத்தின் பரிசுத்த தேவன், தன் தேசத்தை விட்டு, தன் பின்னாக ஒப்புக்கொடுத்து வந்த ஆபிரகாமை நோக்கி, நான் உனக்கு கேடகமும், மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்று சொல்வதற்கு முன் அவனுடைய வாழ்வில் சில காரியங்கள் நடந்திருப்பதாக ஆதியாகமம் பதினைந்தாம் அதிகாரம் முதல் வாக்கியம் நமக்குச் சொல்லுகிறபடியினால், இவ்வதிகாரத்திற்கு முந்திய சில அதிகாரங்களில் முற்பிதாவாகிய ஆபிரகாமுடைய வாழ்க்கையில் அப்படி என்ன காரியங்கள் நடந்தது என்பதை நாம் கவனித்தால், நம்முடைய வாழ்க்கையில், நாமும் அதை செய்வதின் மூலமாக, அகில உலகத்தையும் உண்டாக்கின சர்வ வல்லமை வாய்ந்த தேவனை நமக்கு கேடகமாக கொள்ளலாம்.

**முதலாவதாக,** ஆதியாகமம் பதிமூன்றாம் அதிகாரம், நான்காம் வசனத்தை நாம் வாசிக்கையில், "தான் முதல்முதல் ஒரு பலிபீடத்தை உண்டாக்கினதுமான ஸ்தலமட்டும் போனான்; **அங்கே ஆபிரகாம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டான்**" என்று எழுதியிருக்கிறது. எனக்கன்பான வாலிபனே, நமக்கு பிழைப்பூட்டுகிற நமது தேவன், நமக்கு கேடகமாக இருக்க வேண்டுமென்றால், முதல் நாம் செய்ய வேண்டிய காரியம், அவரை தொழுதுகொள்ளுவதாகும். நாம் அவரை தொழுது கொள்ளும் போது, அவருடைய கற்பனையின்படி தொழுது கொள்ளுகிறோமா என்பதை கவனிக்க வேண்டும். நமது ஆராதனை, சுய இஷ்டமான ஆராதனையாகவோ, மனுஷர்களின் கற்பனையின்படியான ஆராதனையாகவோ இருக்கக்கூடாது. அப்படி நாம் தேவனை ஆராதித்தால் அது வீணான ஆராதனையாகயிருக்கும் (மத். 15:1-9)

மனிதனை தன்னை ஆராதிக்கும்படியாக உண்டாக்கின தேவன், அவன் எப்படி வேண்டுமானாலும் தன்னை ஆராதித்துக் கொள்ளலாம் என்று இருட்டறையில் அவனை விட்டுவிடவில்லை, மாறாக மனிதன் தன்னை எப்படி ஆராதிக்க வேண்டுமென்று தனது நூலாகிய புதிய ஏற்பாட்டில் கூறியிருக்கிறார். யோவான் இக்காரியத்தைக் குறித்து யாத்துக்கொடுக்கும் போது, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார்". (யோவான் 4:24) ஆக, நாம் நமது உள்ளான மனதிலிருந்து (ஆவியோடும்), பரிசுத்த ஆவியானவர் விளம்பின தேவ வசனத்தோடும் (உண்மையோடும்) விண்ணக தேவனை நாம் ஆராதிக்க வேண்டும் என்று கூறி இருக்கிறார். புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும் போது கர்த்தர் கட்டின அந்த ஒரே சபையில் அங்கமானவர்கள், ஆராதனையில்,

ஜெபம், பாடல், கொடுத்தல், பிரசங்கம், கர்த்தரின் பந்தி ஆகிய காரியங்களை செய்திருக்கிறார்கள் என்று உணர்கிறோம். (அப். 2:42; 1கொரி. 16:1,2; IIகொரி. 8:1-5; 9:67). நாமும் அந்த ஒரே சபையில் கர்த்தரால் சேர்த்துக் கொள்ளப்பட தேவனையும், அவருடைய குமாரனையும் விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவ சுதன் என்று அறிக்கை செய்து, நமது கடந்த கால பாவத்திலிருந்து மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற வேண்டியது அவசியம். அப்படி செய்த பின் நாம், தேவனை நம் ஜீவ காலமெல்லாம் ஆராதித்தால், ஆபிரகாமுக்குச் சொன்னது போல, அவர் நமக்கு கேடகமாக இருப்பது நிச்சயம்.

**இரண்டாவதாக,** ஆதியாகமம் பதிமூன்றாம் அதிகாரம் ஏழாம் வசனம் தொடங்கி, பதினொறாம் வசனம் வரை நாம் கவனித்தால், ஆபிரகாம், தன் சகோதரனாகிய லோத்துவை விட்டுப் பிரிந்தான் எனப் பார்க்கிறோம். எனக்கன்பானவர்களே, தேவன், ஆபிரகாமை தன் தேசத்திலிருந்து அழைத்த போது, தேசத்தையும், இனத்தையும், தகப்பன் வீட்டையும் விட்டு விட்டு வரும்படியாக அழைத்தார். ஆனால், ஏனோ இந்த லோத்து ஆபிரகாமோடு வந்துவிட்டார். ஒரு சமயம், ஆபிரகாமின் மந்தை மேய்ப்பருக்கும், லோத்தின் மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது. ஆபிரகாம், லோத்துவிடமிருந்து பிரியும் சூழ்நிலை உருவாகிறது. ஆபிரகாமே, லோத்துவைப் பார்த்து, நாம் பிரிந்து விடலாம் என்கிறார் (ஆதி. 13:7,9) அப்படியே, அழைக்கப்படாத லோத்திடமிருந்து, அழைக்கப்பட்ட ஆபிரகாம் பிரிந்தார் (ஆதி. 13:11) அப்படிப் பிரிந்த பின்பு தான், தேவன் ஆபிரகாமுக்கு கேடகமாக இருப்பேன் என்றார்.

## பாடுகள் நன்மையாக முடியுமா?

**ஆம்! பாடுகள் நன்மையாகவும் முடியலாம். உதாரணமாக, "வலி" *(Pain)* என்ற உணர்வே இல்லையானால் என்னாகும்? நம்முடைய உடையில் தீப்பற்றிவிட்டால், என்ன நடந்திருக்கிறது என்று தெரியும் முன்பே சரீரம் முழுவதும் வெந்து போகும். அதுமாத்திரமல்ல, மனிதன் தன்னுடைய தலையாயப் பண்புகளை வளர்ப்பதற்குப் பாடுகள் உதவி செய்கிறது. பொறுமை, தைரியம் போன்ற அருங்குணங்கள் பாடுகள் மூலம் கிடைப்பவை. "பாலைவனம் இருக்கும் இடத்தில் தான் சூரிய வெளிச்சம் இருக்கும்".**

எனக்கு மிகவும் பிரியமான வாலிபனே, நான் ராத்திரியில் கண்ட கனவுகள், பகலில் நினைவாகாதா என்று வாழ்க்கையில் முன்னேற முயற்சி மேற்கொள்ளும் செயல் வீரனே! தேவனுக்காக உன் வாழ்க்கையை அர்ப்பணித்த நீ, அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடனே பிணைக்கப் படாதிருக்க வேண்டும். (II கொரி. 6:14) நாம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாக மாறியிருக்கிறோம். அப்படி மாறின நாம், நம்மை மீண்டும் தீட்டுப்படுத்தும் எந்த ஒரு விஷயத்தையும் விட்டு பிரிய வேண்டும். அது, நமக்கு அன்பானவர்களாகவுமிருக்கலாம். நாம் நம்மையே வெறுத்துவிட வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறபோது, மற்றவர்களை நாம் தேவனை விட நேசிக்கக் கூடாது. நம்முடன் அவர்கள் பலகாலம் பழகி இருக்கலாம். அவர்களை விலகுவதென்பது அவ்வளவு எளிதானது அல்ல. ஆனாலும், ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும், இரண்டு எஜமானுக்கு நாம் ஒருபோதும் ஊழியம் செய்ய முடியாது. ஆகவே, நாம் ஒருவரைப் பகைத்து மற்றவருக்கு ஊழியம் செய்ய வேண்டும்.

## தேவ நம்பிக்கையற்றவரின் ஒப்புதல்

**ப**தினெட்டாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் வாழ்ந்த, தேவ நம்பிக்கையற்ற, சர் வில்லியம் ராம்சே *(Sir william Ramsay)* என்ற அறிஞர், லூக்கா எழுதின அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை உண்மையல்லாதது என்று நிரூபிக்க, சின்ன ஆசியா பகுதியில், தொல்பொருள் ஆராய்ச்சியில் இறங்கினார். உண்மையாகவே அகழ் ஆராய்ச்சிக்காக இடங்களைத் தோண்டிப்பார்த்து, பல வருடங்களாக ஆராய்ச்சி செய்து, வேறுவழியில்லாமல், அப்போஸ்தலர் நடபடிகளின் சரித்திர உண்மைகளை ஒப்புக்கொண்டார். அந்நூலில் ஆசிரியர் லூக்கா 32 நாடுகளின் பெயர்களையும், 54 பட்டணங்களையும், ஒன்பது மத்திய தரைக்கடல் தீவுகளையும் குறிப்பிடுகிறார். அத்தோடு, 95 நபர்களின் பெயர்களையும் குறிக்கிறார். அவர்களில் 62 பேர்களின் பெயர் வேதாகமத்தின் வேறு எந்தப் பகுதியிலும் கிடையாது. அவருடைய குறிப்புகள் அனைத்தும் உண்மையாக உள்ளது. தேவ ஏவுதல் இல்லாமல் அன்று அடிக்கடி மாறிக்கொண்டிருந்த அரசியல், பூகோளச் சூழலில் லூக்காவால் இவ்வளவு துல்லியமாய் எப்படி எழுதியிருக்க முடியும்.

என் சிந்தனைக்கு இனியவனே, அப்படி பிரிந்து வந்தால், தேவன் எனக்கு துணை நிற்பாரா? என்று கேட்கும் கேள்வி என் செவியில் எட்டுகிறது. அவர்கள் மத்தியிலிருந்து புறப்பட்டுப் போய், அசுத்தமானதைத் தேடாதே, என்று சொன்ன தேவன், அத்தோடு நிறுத்தாமல் "**அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்**". (II கொரி. 6:18) இதற்கு மேல் என்ன வேண்டும். பிரிந்து வந்த நமக்கு சர்வ வல்லவரே தகப்பனாக இருப்பேன் என்று சொல்லும்போது, அவர் நமக்குத் தகப்பனாக இருந்து, ஒரு சரீரப்பிரகாரமான தகப்பனை போலவும், அதைவிட மேலாகவும் நம்மைக் காத்துக்கொள்ளுவார்.

ஆகவே, இளைய ரத்தமே! நீ செய்ய வேண்டியது தேவ சித்தமே! இந்த புதிய ஆண்டில் தேவன் நமக்கு கேடகமும், மிகுந்த பலனாகவுமிருக்க வேண்டுமென்றால், நாம் அவரை நம்மிடமிருந்து பிரிக்கும் எந்த ஒரு நபரிடமிருந்தோ, பொருளிடமிருந்தோ நாம் பிரிய வேண்டும் என்று ஆபிரகாமின் வாழ்விலிருந்து கண்டோம். இவ்விரண்டோடு, நாம் ஆபிரகாம் இன்னொன்றையும் செய்தார் எனக்காண்கிறோம். அவர், சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்த மெல்கிசேதேக்கு என்பவனுக்கு எல்லாவற்றிலும் தசம பாகம் கொடுத்தார். இன்று தசமபாகம் நாம் செலுத்த வேண்டியதில்லை என்றாலும், அதைவிட அதிகமாக நாம் கொடுக்க வேண்டும். (மத். 5:20) ஆகவே, ஆபிரகாம் செய்தது போல நாமும் இவைகளை செய்யும் போது, இப்புதிய ஆண்டில் மாத்திரமல்ல, நம் வாழ்விலே தேவன் நமக்கு கேடகமாயிருப்பார் என்பது உறுதி. ஆமென்!

*ஜே. பிக்கின்ஸ்*

# பலமான ஆதாரங்கள்

சிறுவர் பகுதி

அருமையான சிறுதம்பி தங்கைகளே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் சிறுவர் பகுதியின் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த புதிய ஆண்டு எல்லாவிதத்திலும் உங்களுக்கு பயனளிக்கும் ஆசீர்வாதமான ஆண்டாக இருக்க வேண்டுமென்று தேவனிடம் நான் ஜெபிக்கிறேன். இந்த மாதம் நாம் வேதத்தின் ஒரு சம்பவத்தையும், அதன் மூலம் நாம் தெரிந்து கொள்வது என்ன என்பதையும் பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டின் புத்தகமாகிய எண்ணாகமத்தில் (13:3-33)ல் கானான் தேசத்தை வேவு பார்க்க பன்னிரண்டு மனிதர்கள் சென்றனர் என்று காண்கிறோம். அதில் பத்து பேர் கானானியர்களை பார்த்து பயந்தார்கள். தங்களால் அவர்களை மேற்கொள்ள முடியாது என்று நினைத்தனர். ஆனால், தேவனின் வழிநடத்துதலோடு இஸ்ரவேலர்கள் கானானுக்குள் பிரவேசித்து விட்டார்கள். ஆனால், அங்கே சென்றவர்கள் கானானியர்கள் வழிபட்ட அதே தெய்வங்களை வழிபட்டார்கள். வேறே தெய்வங்களுக்கு முன்பாகவும் விக்கிரகங்களுக்கு முன்பாகவும் அவர்கள் பணிந்து தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள். ஆனால், இதுவோ தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமாக இருந்தது (யாத். 20:3-5). எனவே தேவன் தன் ஜனங்கள் தன்னை மாத்திரம் ஏன் வணங்க வேண்டும், அந்நிய தெய்வ வழிபாட்டிலிருந்து ஏன் திரும்ப வேண்டும் என்று ஜனங்கள் உணர அவர்களிடம் தீர்க்கதரிசிகளை அனுப்பினார்.

அப்படி அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளில் ஒருவன் தான் ஏசாயா அவருடைய காலத்தில் யூதாவின் நான்கு ராஜாக்கள் அரசாண்டார்கள். (ஏசா 1:1). ஆனால் முதல் மூவராகிய உசியா, யோதாம், ஆகாஸ் ஆகியோர் விக்கிரகங்களையும் பலி செலுத்தும் பலி பீடங்களை அகற்றாமல் அப்படியே விட்டுவிட்டார்கள். நான்காவதாக வந்த எசேக்கியா ராஜா, விக்கிரகங்களையும், பீடங்களையும் அழித்து, தேவனுக்கு பிரியமாக தன்னையும் ஜனங்களையும் நடத்தினான். (2 ராஜா 18:3-6) ஆனால், அதிலும் சில ஜனங்கள் விக்கிரகங்களை வழிபட வேண்டும் என்று நினைத்தனர். ஆனால் எசேக்கியா ராஜாவோ அந்த விக்கிரகங்களை ஒழித்துவிட்டான்.

சரி, இப்பொழுது நாம் பாடத்திற்கு வருவோம்! தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலம் இந்த அந்நிய தெய்வங்களுக்கெல்லாம் சவாலை முன்வைத்தார் (ஏசா 41:21-29) "அவர்கள் பலமான நியாயங்களை"



[illegible] நடுவில் மெய்யான தேவனை ஆராதிப்பதை விட்டு விட்டு [illegible] விக்கிரகங்களை ஆராதிக்கும்படி கட்டின பலிபீடங்களை காண்கிறீர்கள்

வெளிப்படுத்தட்டும். தேவன் செய்தபடி நடக்க போகிற காரியங்களையும், நடந்து முடிந்த காரியங்களையும் தெரிவிக்கட்டும் என்று சவால் விடுத்தார்.

ஆனால், அந்த விக்கிரகங்களால் எந்தவித காரியமும் நடைபெறவில்லை. ஏனென்றால் அது ஒரு வெறும் விக்கிரகமே! அது தெய்வம் அல்ல. நம் தேவனைப் போல் அவை அற்புதங்களை செய்கிறதுமில்லை, வேண்டுதல்களை கேட்பதுமில்லை, பதிலளிப்பது மில்லை. அவைகள் வெறுமையிலும் வெறுமையே! அவைகள் மதிப்பற்றவைகள்.

இதைப்போலவே தான் தேவன் பல வசனங்களில் சவால் விடுக்கிறார். மற்ற தெய்வங்களைப் போல் இல்லாமல் நம்முடைய தேவன் "பலமான ஆதாரங்களை" நமக்கு காட்டுகிறார். தேவனின் சிருஷ்டிப்பும், தீர்க்கதரிசன நிறைவேறுதல்களும், எந்த ஒரு அற்புதமும் நம் தேவனின் மகா வல்லமைக்கும், பலத்திற்கும் ஆதாரமாகவே இருக்கின்றன.

அப்படிப்பட்ட தேவனை நாம் நம் பிதாவாக கொண்டிருப்பது எவ்வளவு சிலாக்கியம் பாருங்கள்! அந்த தேவனை மட்டும் தொழுது கொண்டால் நமக்கு அநேக ஆசீர்வாதங்கள் நிச்சயம் உண்டு.

**R.A.R. NAYAGAM**


**புதிய ஊழியங்களுக்காக ஜெபியுங்கள் !**

***காங்கயம் கிறிஸ்துவின் சபையாரால் நடத்தப்பட்டு வருகிற எக்லீசியா வேதகாம கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்து விட்டு ஊழியங்களை தொடங்கி இருக்கிற சகோதரர்களுக்காக ஜெபியுங்கள்!***

| | | |
|---|---|---|
| சகோ. ரமேஷ் பாபு<br>மேட்டூர். | சகோ. பிரபு<br>ராசிபுரம். | சகோ. சாமிதுரை<br>ஈரோடு. |

# விசுவாசத்தின் அடிப்படைகள்

நாம் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை உபதேசங்கள், விதிகள் அடங்கிய தொடரின் இரண்டு பாடங்களை நாம் முடித்துள்ளோம். பாடம் 1 வேதாகமத்தின் அதிகாரமும், ஏவுதலும், பாடம் 2 பாவமும், பாவத்திற்கு தேவனுடைய தீர்வும், மூன்றாவது பாடத்தின் தலைப்பு என்னவென்றால் "முதல் நூற்றாண்டில் மனமாற்றம் செய்யப்பட்டவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு எந்த சபையில் சேர்ந்தார்கள்?'' நாம் முதலாவது இந்த பாடத்தின் புறக்குறிப்பை முதலில் பார்ப்போம். கீழ்காணும் கேள்விகளுக்கு பதில் அளித்துக் கொண்டு இந்த பாடத்தை அணுகுவோம்.

**I நாம் எதற்காக இந்த கேள்விக்கு பதில் அளிக்க வேண்டும்?**

**II சபை என்பதற்காக கிரேக்க பதம் என்ன?**

**III புதிய ஏற்பாட்டில் சபையை குறிப்பதற்கான வேறு பதங்கள் உள்ளனவா?**

**IV புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிற சபை எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?**

**V முதல் நூற்றாண்டில் மனமாற்றம் செய்யப்பட்டவர்கள் எந்த சபையில் சேர்ந்தார்கள்?**

இப்போது இந்த கேள்விகளுக்கு பதில் அளிப்போம்.

**I** நாம் எதற்காக இந்த கேள்விக்கு பதில் அளிக்க வேண்டும்.?

இன்றைய நாட்களில் மக்கள் செய்கின்ற பல்வேறு தவறான கருத்துக்களால் நாம் இந்த கேள்வியைக் கேட்டு அதற்கான பதிலையும் கொடுக்க வேண்டும். சிலர் நம்மை பார்த்து நீங்கள் எந்த சபையில் சேர விரும்புகிறீர்களோ அங்கே சேர்ந்து ஆராதனை செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். ஒரு சிலர் நம்மை பார்த்து நீங்கள் ஆராதனையில் பங்கு பெறும் சபை முக்கியமானதல்ல நீங்கள் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். சிலர் மிக தைரியமாக தேவனை பிரியப்படுத்த சபையில் அங்கத்தினராக வேண்டிய அவசியமில்லை என்று சொல்வார்கள்.

மேற்கூரிய கருத்துக்களை மனதில் கொண்டு இவைகள் புதிய ஏற்பாட்டில் தேவன் சொன்ன காரியங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளதா என்பதை நீங்களும் நானும் நிர்ணயம் செய்ய வேண்டும். அவைகளை

கண்டுபிடிக்க தேவனுடைய வார்த்தையை நாம் ஆராய்வோம். அப்படி நாம் செய்யும் போது நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்கு சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (அப். 20:32) தேவனுடைய வசனம் மாத்திரமே நம்மைத் தேறினவர்களாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவர்களாகவும் மாற்றுகிறது. (தீமோத். 3:16,17) வேதாகமம் மாத்திரமே நம்முடைய ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

**II "சபை" என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள பதத்தின் பொருள் என்ன?**

"எக்லீசியா" என்ற கிரேக்க பதம் தான் தமிழில் "சபை" என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த கிரேக்க பதமானது இரண்டு மூல வார்த்தைகளை உள்ளடக்கியுள்ளது; "ஏக்" மற்றும் "கிளீஸிஸ்" என்பவை அந்த மூல வார்த்தைகளாகும் இவைகளின் முழுமையான அர்த்தம் "அழைக்கப் பட்டவர்களின் கூட்டம்" என்பதாகும்.

ஆகவே "சபை" என்பது அழைக்கப்பட்டவர்களின் கூட்டமாகும், சபை என்பது ஒரு கட்டிடம் அல்ல. அழைக்கப்பட்டவர்களின் கூட்டத்தைப் பற்றி புதிய ஏற்பாட்டில் தேவன் ஏதாவது சொல்கிறாரா? ஆம் நிச்சயமாக! தேவன் இந்த வகையான மொழிநடையை கிறிஸ்தவர்களைக் குறிப்பிடுவதற்காக உபயோகப்படுத்துகிறார்!

1 பேதுரு 2:9ல் நாம் வாசிக்கும்போது தேவன் கிறிஸ்தவர்களை அந்தகாரத்திலிருந்து (தீங்கையும், பாவத்தையும் குறிக்கிற) தம்முடைய ஆச்சர்யமான ஒளிக்கு அழைத்திருக்கிறார் என்று நாம் வாசிக்கிறோம். ஆனால், தேவன் எப்படி கிறிஸ்தவர்களை அழைக்கிறார்? சிலர் தேவன் தங்களை சொப்பனத்தின் மூலமாகவும், தரிசனங்கள் மூலமாகவும், தேவதூதன் மூலமாகவும், பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் அழைக்கிறார் என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

ஆனால் தேவன் தம்முடைய வார்த்தையில் என்ன சொல்கிறார்? IIதெசலோ 2:14ல் நாம் வாசிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் பவுல் மூலமாக சொல்லும்போது தேவன் நம்மை சுவிசேஷத்தின் மூலமாகத்தான் அழைக்கிறார் சொப்பனங்கள், தரிசனங்கள் மூலமாகவும் அல்ல, தேவ தூதர்கள் அல்லது பரிசுத்த ஆவியானவரின் நேரடியாக நம்மை அழைப்பதின் மூலமாகவும் அல்ல! அதாவது, தேவன் தம்முடைய பிரியமான குமாரனின் புதிய ஏற்பாடாகிய சுவிசேஷத்தில் நாம் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்றும் அனுதினமும் நாம் எப்படி

வாழவேண்டும் என்றும் தேவன் சொல்லியிருக்கிறார். எனவே சபை என்பது பாவ அந்தகாரத்தில் மூழ்கியுள்ள உலகத்திலிருந்து அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் சரீரமாயிருக்கிறது.

**III** புதிய ஏற்பாட்டில் சபையை குறிப்பதற்கான வேறு பதங்கள் உள்ளனவா?

ஆம் இருக்கிறது! சபையை குறிப்பதற்காக தேவன் உபயோகப்படுத்தும் பதம் "ராஜ்யம்" மத்தேயு 16:18,19 யை நாம் வாசிக்கும் போது 18 ஆம் வசனத்தில் இயேசு தன் சபையை கட்டுவதாக சொன்னார். ஆனால், நம்முடைய அருமை இரட்சகர் 19 ஆம் வசனத்தில் என்ன சொன்னார் என்பதை கவனியுங்கள், இயேசு அதே ஆவிக்குரிய சரீரத்தை "பரலோக ராஜ்யம்" என்று குறிப்பிடுகிறார். சபையை குறிப்பதற்காக தேவன் உபயோகப்படுத்தும் இன்னொரு பதம் "வீடு" 1தீமோத் 3:15ல் நாம் வாசிக்கும் போது அந்த வசனத்தில் தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் "ஜீவனுள்ள தேவனுடைய சபையை" "தேவனுடைய வீடு" என்று குறிப்பிடுகிறார். எனவே இந்த வசனங்களில் தேவன் "சபை" "ராஜ்யம்" "வீடு" இவையெல்லாம் ஒரு பொருள்படும் விதத்தில் மொழிநடையை உபயோகப்படுத்தியுள்ளார். இந்த தகவல்கள் எல்லாம் நாம் பின்வரும் கேள்விகளுக்கு வேதாகமத்திலிருந்து பதில் அளிப்பதற்கு உதவியாக இருக்கும்.

**IV** புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த சபையானது எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?

முதலாவது சபையானது தேவனுடைய அநந்த நோக்கத்தில் இருந்தது என்பது தெளிவாகிறது. எபேசி 3:9-11யை நாம் வாசிக்கும்போது தேவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே தேவனுடைய அநந்த ஞானமானது சபை மூலமாய் தெரிய வேண்டும் என்பது அவருடைய நோக்கமாயிருந்தது. எனவே இங்கே நாம் தேவனுடைய நித்திய நோக்கத்திற்கும், இயேசு கிறிஸ்துவிற்கும், சபைக்கும் உள்ள தொடர்பை நாம் பார்க்க முடியும். இரண்டாவது சபையானது பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது. ஏசாயா 2:2-4ல் நாம் வாசிக்கும்போது தேவன் ஏசாயா மூலமாக தீர்க்கதரிசனம் உரைக்கும்போது கர்த்தருடைய வீடு பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்படும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார். நாம் ஏற்கனவே பார்த்தபடி வீடு என்பது தேவன் சபையை குறிப்பதற்காக உபயோகப்படுத்தும் பதங்களுள் ஒன்று. எனவே தேவன் தம்முடைய சபை பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்படும் என்று சொன்னார். மேலும் தேவன் சொல்லும்போது எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள் என்றும்

சொன்னார். எனவே அது ஒரு உலகளாவிய சபையாக இருக்கும், இஸ்ரவேல் என்று ஒரு எல்லையை மாத்திரம் உள்ளடக்கியதாக இருக்காது. மேலும் தேவன் தம்முடைய சபையை ஸ்தாபிக்கும்போது அவர் தமது வழிகளை ஜனங்களுக்குப் போதிப்பார், எருசலேமிருந்து கர்த்தருடைய வசனம் வெளிப்படும்.

தேவன் சபை சம்மந்தமான இன்னொரு தீர்க்கதரிசனத்தையும் தானியேல் புஸ்தகத்தில் பதிவு செய்திருக்கிறார். தானியேல் 2:44ல் நாம் வாசிக்கும்போது தேவனால் ஏவப்பட்ட தீர்க்கதரிசி பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார். நாம் மத்தேயு 16:18,19ல் நாம் ஏற்கனவே படித்தபடி இயேசு ராஜ்யம் என்ற வார்த்தையை சபையை குறிப்பதற்காக உபயோகப்படுத்துகிறார். தேவன் அந்த வார்த்தையை அதே விதத்தில் தான் உபயோகப்படுத்துகிறார் என்பது தெளிவாகிறது. எனவே இந்த வசனத்தில் தேவன் சபையை ஏற்படுத்தப் போவதாக சொன்னார்.

அந்த ராஜாக்களின் நாட்களில் இவைகள் சம்பவிக்கும்; இந்த வேதபகுதியைக் கவனமாகப் படித்தால் அந்த ராஜாக்களின் நாட்களில் என்பது நமக்கு தெளிவாகும். இந்த ராஜ்யமாகிய சபை ஒருபோதும் அழிக்கப்பட மாட்டாது என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும்.

மூன்றாவது, சபையானது முதல் நூற்றாண்டில் சமீபித்திருந்தது. மத்தேயு 4:17யை நாம் வாசிக்கும்போது முதல் நூற்றாண்டில் இயேசு இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கித்தார். நாம் ஏற்கனவே மத்தேயு 16:18யை வாசித்தோம். அந்த வசனத்தில் நம்முடைய எஜமான் "நான் என்னுடைய சபையைக்கட்டுவேன்" என்று சொன்னார். ஆனால், அப்போது இயேசு தமது சபையை ஸ்தாபிக்கவில்லை ஆனால், அதை வருங்காலத்தில் சீக்கிரத்தில் செய்வதாக இருந்தார். அது உண்மைதான் ஏனென்றால் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை பேதுருவுக்குத் தருவதாக இயேசு வாக்குத்தத்தம் செய்திருந்தார். பேதுரு மனுஷனாக இருந்தபடியால் அவர் பூமியில் அதிக நாட்கள் வாழ முடியாதபடியால் அதை இயேசு சீக்கிரமாக நிறைவேற்றினார்.

இந்த பாடத்தின் முக்கிய வசனம் மாற்கு 9:1 கர்த்தருக்கு சித்தமானால் அந்த வசனத்தை வருகின்ற மாதத்தில் படிப்போம். இயேசு சொன்ன காரியங்களை ஜாக்கிரதையாகக் கவனியுங்கள். நாம் இதுவரைப் படித்தவைகளை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

**சார்லி டிபால்மா.**

# நம் காரியம் வாய்க்க

மனிதர் பொதுவாக தாம் நினைக்கும் காரியம் வாய்ப்பதற்காக, ஜோதிடம், எதிர்காலம், ராசிபலன் நாள் நட்சத்திரம் போன்றவற்றைப் பார்க்கிறார்கள். கிறிஸ்தவர்களாயிருந்தும் சிலர் இதைப் போன்றக் காரியங்களில் ஈடுபடுவதுண்டு! ஆனால், வேதாகமம் இதைத் தடைச் செய்கிறது. (லேவி 19:26, 2 ராஜா 21:6) தேவன் தாம் உண்டாக்கிய "எல்லா நாளுமே நல்லது" என்றே கண்டார். பலர் இதையறியாமல் உலகத்தாரின் பாரம்பரியங்களைப் பின்பற்றி சூனியம், மந்திரம், மருந்து வைத்தல் போன்றக் காரியங்கள் நமக்கும் பலிக்கும் என பயப்படுகின்றனர் (எண். 23:23)

தேவன் நம்மை நேசிக்கும் தகப்பனாகவும் எல்லா நன்மைகளையும் நமக்கு தர வல்லமையுள்ள சர்வ வல்லவராகவும் இருக்கிறார். தேவனுடைய வார்த்தையில் உள்ள கேள்வியைக்கவனியுங்கள். "........தேவன் நம்முடைய பட்சத்திலிருந்ததால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?" (ரோ 8:31, 32) எனவே நம்முடையக் காரியங்கள் வாய்க்க தேவனுடைய வார்த்தைகளை மேலும் கவனிப்போம்.

## நாளும் நடப்பும்

1. தமிழகம் மற்றும் புதுவை சட்டமன்றங்களுக்கு மே மாதத்தில் தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டு வருகிறது.
2. கர்நாடகத்தில் பா.ஜ.க. ஆதரவுடன் முன்னாள் பிரதமர் தேவகௌடாவின் மகன் எச்.டி. குமாரசாமி புதிய அரசு அமைக்க முயற்சிக்கிறார்.
3. எந்த வருடமும் இல்லாத அளவு, வட இந்தியாவில் கடுமையான பனிப்பொழிவு.
4. லஞ்சம் வாங்கிய எம்.பிக்கள் பதவி பறிப்பு விவகாரம் - மக்களவை தலைவருக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்.
5. ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி - முதல் சுற்றில் வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சி தோல்வி.
6. பாக். - இந்தியா இடையே நடந்த முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மழையால் பாதிக்கப்பட்டு, டிராவில் முடிந்தது. ஐம்பது வருட சாதனை முறியடிப்பு வாய்ப்பும் கை நழுவிப்போனது.

**முதலாவதாக**, நம் காரியம் வாய்க்க வேண்டுமானால், **தேவன் நம்மோடிருக்க வேண்டும்** (ஆதியாகமம் 39:2-5) யோசேப்புக்கு பல இன்னல்கள் வந்த போதும் தேவன் அவனோடிருந்தபடியால் அவன் காரிய சித்தியுள்ளவனான், அதை அறிந்த அவனுடைய எஜமானும் அவனை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்தான். இப்போது தேவன் நம்முடன் இருக்க வேண்டுமானால் அவருக்கு விரோதமான காரியங்களை நம்மிடமிருந்து நீக்கி கிறிஸ்துவின் உதவியால் நாம் சுத்தமாகும் போது (1யோவா 1:7-9) தேவன் நம்மோடு இருப்பார்.

**இரண்டாவதாக,** நம்முடைய காரியங்கள் வாய்க்க நாம் தேவனுடைய வார்த்தைகளாகிய **உடன்படிக்கையைக் கைக்கொள்ள வேண்டும்** (உபா 29:9) நம் வாழ்க்கையை நம் சொந்த ஞானத்தால் நடத்த முடியாது. அதற்கு தேவனுடைய ஒத்தாசை வேண்டும். ஆகவேதான் தேவன் மனிதனுக்கு உடன் படிக்கையை ஏற்படுத்தினார். இஸ்ரவேலருடன் பழைய ஏற்பாட்டையும் நம்முடைய ஆண்டவர் இயேசுவினால் புதிய ஏற்பாட்டையும் கொடுத்த தேவனுடைய உடன்படிக்கையின்படி, அப்போஸ்தலருடைய உபதேசப்படி நாம் நடக்கச்சித்தமுள்ளவர்களாகும் போது நம்முடைய காரியங்கள் வாய்க்கும்.

தாவீது தன் அந்திமக்காலத்தில் மகன் சாலமோனுக்கு அறிவுரை சொல்லும் போது, நாம் தேவனுடையக் கற்பனைகளையும், நியாயங் களையும் **செய்யக் கவனமாயிருக்கும் போது** பாக்கியவானாக முடியும் என்று (1 நாளா 22:12,13) கூறுகிறார். அநேகர் தங்கள் கவனத்தை உலகப் படிப்பிற்கும், பொருள் சம்பாதிக்கவும் மட்டுமே செலுத்துகின்றனர். கிறிஸ்தவர்கள் இயேசுவையேக் கவனித்து கீழ்ப்படிய வேண்டும் (எபி. 3:1) அதனால் தான் சங்கீதக்காரன் ஆரம்பத்திலேயே ஒருவன் தன் கவனத்தை தவறான வழியில் செலுத்தாமல் வேதத்தில் செலுத்தும் போது அவர் செய்வதெல்லாம் வாய்க்கும் என்றான் (சங். 1:1-3).

அடுத்து தன் இளம் வயதில் ராஜாவான உசியா என்பவனிடமுள்ள ஒரு காரியத்தைக் கவனிப்போம். 2 நாளா 26 ம் அதிகாரம் வசனம் 4,5ல் **அவன் தேவனை தேட மனதினங்கினதால்** தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார் என்று பார்க்கிறோம். அநேகர் வீண் புகழ்ச்சியையும், தேவைக்கதிமான கவுரவத்தையும் வருமானத்தையும், அந்தஸ்தையும் தேடுவதில் மனதை செலுத்துகின்றனர். ஆனால், முழுமனதோடு தேவனிடம் அன்புகூர்ந்து அவரை வேதாகமத்தின் மூலமாகவும், ஜெபத்தினாலும் தேட நம்மனதினங்கினால் நம் காரியம் நிச்சயம் வாய்க்கும்.


**முடிவாக,** மனிதனுக்கு நம்பிக்கைக் குறையும் போதுதான் வாழ்வில் பயங்களும் திகில்களும் தோன்றுகிறது. ஆனால், கிறிஸ்தவ வாழ்க்கை நம்பிக்கையும் ஆறுதலும் நிறைந்தது. நாம் ஆராதிக்கும் தேவன் ஆறுதலின் தகப்பனாவார். அவர் நம்மிடத்திலே நம்பிக்கையை துவக்கியுள்ளார்; அதை நாம் முடிவு வரை பற்றிக் கொண்டிருக்க வேண்டும் (எபி 3:14) ரோமருக்கு பவுல் எழுதும்போது "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்" (12:12) என்று வலியுறுத்துகிறார். நம்பிக்கையில் அநேக உதாரணங்கள் வேதத்தில் காணப்பட்டாலும் யோசபாத் ராஜாவின் வார்த்தைகள் இங்கு கவனத்திற்குரியது.

அவனுடைய வாழ்வின் இக்கட்டான சூழ்நிலையில் திரளான எதிரிகள் நடுவில் ஜனங்கள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்த வேளையில் யோசபாத் ஜனங்களைப்பார்த்து, "உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள் அப்பொழுது சித்தி பெறுவீர்கள்" என்றான் (2 நாளா 20:20) பிரசங்கி சாலமோன், "பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாக பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள்" (பிர. 8:12) என்கிறான். நாம் சுகமாய் வாழ வேண்டுமானால் பணப்பிரியராய், தற்பிரியராய் இல்லாமல் சிறுமையும், எளிமையுமானவர்களை விசாரிக்கும் போது (எரே. 22:16) அப்படியாகும்.

ஆகவே, எனக்குப் பிரியமானவர்களே! நாம் ஒவ்வொருவரும் நினைக்கும் காரியங்கள் நடந்தேற வேண்டுமானால் நமக்கு தேவபக்தி அவசியமாகிறது. வாலிப வயதில் அநேகர் தேவனை அசட்டை பண்ணி பிற்காலத்தில் வேதனையுடன் இங்குமங்கும் அலைகிறதைக் காண்கிறோம். மரணத்திற்குப்பின் என்ன நடக்கும் என்பதை அறியாத மனிதனிடம் தங்கள் எதிர்காலத்தை அறிய மக்கள் ஆவலாய் நாடுகிறார்கள். ஆனால், சர்வத்தையும் சிருஷ்டித்து நாம் காணும் இவ்வுலகத்தை அக்கினிக்கு இரையாக வைத்து தம் குமாரன் மூலம் நியாயந்தீர்க்கப்போகும் தேவனுடைய வார்த்தையை மக்கள் அசட்டை செய்தால் அதற்குரிய தண்டனையை அவர்கள் அடைந்தே தீரவேண்டும்.

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாத சரீரப் பிரகார முயற்சிகள் அனைத்துமே வீண். சரீர முயற்சி இவ்வுலக ஞானத்தில் மிகவும் போற்றப்பட்டாலும் அது அற்ப பிரயோஜனமுள்ளது என தேவ ஞானம் சொல்கிறதை நாம் கவனிப்போம். தேவ பக்தியானது இந்த உலக வாழ்க்கைக்கும் இதற்குப் பின் வரும் மறுமையின் வாழ்வுக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது (1தீமோ 4:8) ஆகவே சர்வவல்ல தேவனை நாம் இயேசுவின் மூலம் அண்டிக்கொண்டு நம்முடையக் காரியங்களை வாய்க்கச் செய்வோமாக. ஆமென்!

**Bro. K. பாண்டியன்**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661 / 87 - New Delhi

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம்
நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




# S.S. Music TV ல்

## திருமறை தியானம்

பிரதி திங்கட்கிழமை காலை 7.15 - 7.45 மணி

---

# தமிழன் டிவி யில்

## திருமறை தியானம்




பிரதி சனிக்கிழமை காலை 7.15 – 7.30 மணி

பிரதி ஞாயிறு இரவு 9.45 - 10.00 மணி

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவச பயிற்சி.**

---

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ. எண் – 27, காங்கேயம் - 638 701.

தமிழ்நாடு. இந்தியா.